யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

FWC

| தரம் :- 13 (2016) | இந்திய வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

❖ **1 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) (1) விந்தியம் (2) நீலகிரி (3) தௌலகிரி
(4) சத்புர (5) மகாதேவோ (.......)

02) (1) தமிழ் (2) தெலுங்கு (3) கன்னடம்
(4) உருது (5) மலையாளம் (.......)

03) (1) பாஹியன் (2) தாராநாத் (3) சுவென்சாங்
(4) இட்சிங் (5) சுங்யுங் (.......)

04) (1) பாடலிபுரம் (2) புருசபுரம் (3) கௌசாம்பி
(4) அங்க (5) சிராவஸ்தி )

05) (1) மேகதூதம் (2) ருதுசம்காரம் (3) சாகுந்தலம்
(4) மிருச்சகடிகம் (5) ரகுவம்சம் (.......)

06) (1) அலெக்சாண்டர் கனிங்ஹம் (2) ஸ்ருவட் பிகொட்
(3) ஏ. எஸ். பசாம் (4) ஜோன் மார்ஷல்
(5) மோர்டிமர் வீலர் (.......)

07) (1) காவேரி (2) துங்கபத்ரா (3) கிருஷ்ணா
(4) கோதாவரி (5) பிரம்மபுத்திர (.......)

08) (1) சந்திரகுப்த (2) பிந்துசார (3) யஞ்சசேன
(4) அசோகன் (5) சம்பிரதி (.......)

09) (1) நாலந்த (2) எல்லோரா (3) பாக்
(4) கார்லி (5) ராஸிக் (.......)

10) (1) சாக்கியர் (2) குரு (3) கோலியர்
(4) லிச்சாவி (5) விதேஹ (.......)

❖ **11 - 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) (1) சம்பா - அங்க
(2) வாரணாசி - காசி
(3) குசினாரா - சூரசேன
(4) சிராவஸ்தி - கோசல
(5) உஜ்ஜையினி - அவந்தி (.......)

The National e-learning Portal for The General Education

12) (1) கல்ஹன - மாளவிகாக்னிமித்திரம்
(2) பதஞ்சலி - மகா பாஸ்யம்
(3) பானபட்டர் - ஹர்ஷசரிதம்
(4) 1ம் மகேந்திரவர்மன் - மத்த விலாச பிரஹசனம்
(5) பாணினி - அஸ்டாத்யாயி (.......)

13) (1) சுங்கர் - புஷ்யமித்ர
(2) குசானர் - நகபான
(3) காலிங்க - காரவேல
(4) புஷ்யபூதி - ஹர்ஷவர்தன
(5) சாதவாகன - சிமுக (.......)

14) (1) ஹாதிகும்ப - காரவேல
(2) நாசிக் - கௌதமி கால ஸ்ரீ
(3) ஐகோல் - II ம் புலிகேசி
(4) சாபஷ்கார்ஹி - சமுத்திரகுப்த
(5) மல்லிகார்ஜீன கோவில் - நரசிம்மவர்மன் மாமல்லன் (.......)

15) (1) சாஞ்சி - காபி
(2) அஜந்தா - குகைக் கோவில்
(3) மதுரா - குகை ஓவியம்
(4) மகாபலிபுரம் - பல்லவரதம்
(5) கங்கை கொண்டான் - இந்துக் கோவில் (.......)

❖ **16 - 20 வரை X, Y நிரல்களில் தரப்பட்டுள்ளவற்றை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| (1) மகதம் | A - பிம்பிசாரன் |
| (2) அவந்தி | B - உதயனன் |
| (3) கோசலம் | C - பிரசேனஜித் |
| (4) வத்ச | D - புக்குசாகி |
| (5) காந்தாரம் | E - பிரஜ்யோத |

(1) ABCDE (2) ACBED (3) ADBCE (4) AECBD (5) ADECB (.......)

17)

| X | Y |
|---|---|
| (1) பிராசய | A - பாடலிபுரம் |
| (2) உத்தராபத | B - சுவர்ணகிரி |
| (3) தக்ஷிணாபத | C - தக்ஷிலா |
| (4) அவந்தி | D - தோசாலி |
| (5) கலிங்க | E - உஜ்ஜையினி |

(1) ABCDE (2) ACBED (3) ADBCE (4) AECBD (5) ADECB (.......)

18)

| X | Y |
|---|---|
| (1) கிராமனி | A - கிராம நிர்வாகத் தலைவர் |
| (2) ஜன | B - இனக்குழுக்களின் அமைப்பு |
| (3) விஷய | C - கூட்டிணைந்த சபை |
| (4) பூச | D - ''விஷய'' வின் சில ஒன்றிணைந்த நிர்வாக அலகு |
| (5) சமிதி | E - கிராமங்கள் இணைந்த நிர்வாக அலகு |

(1) AEDCB (2) ABECD (3) ADECB (4) ACDBE (5) ADBCE (.......)

19) X | Y

| X | Y |
|---|---|
| (1) கௌதமிபுத்ர | A - மேற்கு விந்தியத்தின் பிரபு |
| (2) IIம் சந்திரகுப்தன் | B - மதுரை கொண்டான் |
| (3) நரசிம்மவர்மன் | C - சண்டப்ப பச்சோத |
| (4) தண்டிதுர்க்க | D - விக்ரமாதித்ய |
| (5) பராந்தகன் | E - வாதாபி கொண்டான் |

(1) ABCDE (2) ACBED (3) ADBCE (4) AECBD (5) ADECB (.......)

20)

| X | Y |
|---|---|
| (1) இந்திரன் | A - புயலுக்கு அதிபதி |
| (2) குபேரன் | B - மரணத்துக்கு அதிபதி |
| (3) வருணன் | C - போருக்கு அதிபதி |
| (4) யமன் | D - உதயப் பொழுதுக்கு அதிபதி |
| (5) மருத் | E - செல்வத்துக்கு அதிபதி |

(1) CABDE (2) CBDEA (3) CEDBA (4) CEABD (5) CDEAB (.......)

❖ **21 - 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் சரியான விடையை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) முதலாவது பௌத்த சங்க மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவர்
(1) மொக்கலிபுத்ததேரர் (2) மஹகசப்பதேரர் (3) ஆனந்ததேரர்
(4) வசுமித்ரதேரர் (5) சாரிபுத்ரதேரர் (.......)

22) வாகாட இராச்சியத்தை ஆண்ட குப்த வம்ச இளவரசி
(1) துருவாதேவி (2) லிச்சவி குமாரதேவி (3) குபேரநாகா
(4) பிரபாவதிகுப்தா (5) தத்தாதேவி (.......)

23) வேதகாலத்து நிர்வாகம் தொடர்பாக மேல்வரும் பெயர்ப் பட்டியல்களில் பொருத்தமானது
(1) ஜன, கிராம, சமிகி, விஸ் (2) கிராம, ஜன, விஸ், விஷய
(3) கிருஹ, விஸ், ஜன, மண்டல (4) கிராம, ஜன, பஞ்சாயத்து, விஸ்
(5) கிராம, விஸ், ஜனபத, ராஷ்டிர (.......)

24) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் குஷான இராச்சியத்தின் மத்திய ஆசியாவில் இருந்த கலாசார நிலையத்தை சரியாகக் காட்டுவது எது?
(1) சியல்கோட் (2) கஷ்கார் (3) ஜலந்தா
(4) கயினிகார் (5) பெஷவார் (.......)

25) வாகடக மன்னனான II ஆம் ருத்திரசேனனுக்குத் தனது மகளை மணமுடித்து வைத்த குப்த அரசன் யார்?
(1) சமுத்திரகுப்த (2) II ஆம் சந்திரகுப்த (3) ஸ்கந்தகுப்த
(4) பிருகுப்த (5) புத்தகுப்த (.......)

❖ **26 - 30 வரையுள்ள எல்லா வினாக்களும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது. அதனை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

26) மகதத்தின் எழுச்சிக்கான காரணங்கள்
(1) நெகிழ்சியுள்ள சமுதாயச் சூழல்
(2) சந்தப் பிரத்யோக மன்னன் இட்ட அத்திவாரம்
(3) உற்சாகமுடைய அரசர்கள் ஆட்சி செய்தமை
(4) பாதுகாப்புடைய அரண்கள் சூழ்ந்த இராசதானி
(5) பல்வேறு இயற்கை வளங்கள் கிடைத்தமை (.......)

27) குஷான காலத்திற் சமயம் கொண்டிருந்த முக்கியத்துவம்

(1) நான்காவது பௌத்த சங்கத்தார் மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தமை

(2) மத்திய ஆசியாவில் பௌத்தம் பரவியமை

(3) பௌத்த கல்வி நிலையங்களினால் நாலந்த முதன்மை பெற்றமை

(4) மகாயானம் மேலோங்கியமை

(5) காந்தார கலைப்பாணியில் உற்பத்தி (.......)

28) சமுத்திரகுப்த சக்கரவர்த்தியின் படையெடுப்பு நடவடிக்கைகள்

(1) செலுகஸ்நிகேற்றர் மீதான வெற்றி

(2) ஒன்பது நாக ஆட்சியாளர்களின் தோல்வி

(3) எல்லைப்புற அரசுகளைக் கைப்பற்றல்

(4) தென்புறத்தில் போர் முனைப்பு

(5) கண அரசுகளைக் கைப்பற்றல் (.......)

29) பௌத்த, சமண போதனைகளுக்கிடையிலான ஒற்றுமைகள்

(1) வேத போதனைகளை நிராகரித்தமை

(2) ‘நிர்வாண’ தொடர்பான நம்பிக்கை

(3) எளிமையைக் கடைப்பிடித்தல்

(4) சாதி அடிப்படையிலான சமூகத்தை ஏற்றுக்கொள்ளாமை

(5) அஹிம்சையில் நம்பிக்கை (.......)

30) மௌரிய சாம்ராச்சியத்தின் நிர்வாக நிலையங்கள்

(1) பாடலிபுரம் (2) தக்ஷிலா (3) உஜ்ஜெனி

(4) மகாரஷ்டிரா (5) சுவர்ணகிரி (.......)

❖ **31 - 35 வரை A, B, C, D என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியானவை. அதன் படி**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற் பட்ட விடைகள் சரி |

31) சங்க இலக்கியம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

A) சங்கம் என்பது இந்தியா முழுவதும் பரவியிருந்த தனியாள்களின் கூட்டமாகும்.

B) நந்த மன்னர்களின் உதவியுடன் இந் மாநாடுகள் நடைபெற்றன.

C) முதலாவது கூட்டம் தென்மதுரையில் நடைபெற்றது.

D) சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம் ஒரு முக்கிய படைப்பாகும். (.......)

32) பின்வருவனவற்றுள் தக்கணத்தில் சாதவாகனர்களின் அரசியல் வரலாறு தொடர்பாகச் சரியான கூற்று / கூற்றுக்கள் எது? / எவை?

A) சாதவான வம்சத்தைத் தாபித்தவர் சீமுக ஆவார்

B) அவர்கள் தக்கணத்தில் ஒரு சுதந்திர இராச்சியத்தை ஸ்தாபித்தார்

C) கோதாவரி, கிருஷ்ணா கழிமுகப் பிரதேசத்தில் இந்த இராச்சியத்தின் ஆரம்பம் அமைந்திருந்தது.

D) கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரை அவர்களின் ஆட்சி நிலவியது. (.......)

33) பின்வருவனவற்றுள் குப்த கலாசாரம் தொடர்பான சரியான கூற்று / கூற்றுக்கள் எது / எவை?
   A) இந்து சமய இலக்கியங்களின் மறுமலர்ச்சி
   B) இந்து சமய மறுமலர்ச்சி
   C) கைலாசநாதர் கோவிவி எல்லோராவில் அமைக்கப்பட்டது
   D) விக்கிரமசீல ஓதந்தரபுர பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன (.......)

34) கி. மு. 6ம் நூற்றாண்டில் வட இந்தியாவின் அரசியல் நிலைமை தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
   A) கி. மு. 6ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பதினாறு மஹாஜன பதங்கள் இருந்ததாக அங்குத்தர நிகாயாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
   B) இந்த மஹாஜன பதங்கள் குடியரசாகவும், முடியரசாகவும் நிர்வகிக்கப்பட்டன
   C) ஜன பதங்களுக்கிடையிலான போராட்டங்களின் பின்னர் ஆறுமட்டுமே முதன்மை பெற்றன.
   D) இறுதியில் வஜ்ஜி குடியரசு வெற்றி பெற்றது. (.......)

35) மௌரிய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்கு காரணமான விடயங்களுடன் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?
   A) கலிங்க போரில் ஏற்பட்ட தோல்வி
   B) வெளிநாட்டு உறவுகளில் சாம்ராச்சியத்தில் தீமையான விளைவுகள்
   C) இறுதிக் கட்டத்தில் சாம்ராச்சியத்தில் அரசு கட்டிலேறிய பலவீனமான ஆட்சியாளர்கள்
   D) வெளிநாட்டு படையெடுப்புக்களும் அரசியல் ஒற்றுமை சீர்குலைவும் (.......)

❖ **36 - 40 வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| சரியானது | சரியானது |
| சரியானது | பிழையானது |
| பிழையானது | பிழையானது |
| பிழையானது | சரியானது |
| சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினைச் சிறப்பாக விளக்குவது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | சிந்துவெளி நாகரிக முத்திரைகள் அங்கிருந்து மக்களின் சமய சடங்குகளை வெளிப்படுத்துகின்றன. | ஹரப்பா நாகரிகம் உலகின் புராதன நாகரி கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. (.........) |
| 37) | மகாபத்மநந்த மன்னன் நந்த அரச வம்சத்தின் கடைசி ஆட்சியாளன் ஆவான். | நரசிங்க குப்த மன்னன் ஆட்சிக்காலத்தி லேயே பாஹியன் இந்தியாவில் பயணங்கள் மேற்கொண்டான். (.........) |
| 38) | எல்லோராக் குகைகள் பௌத்தம், சமணம், பிராமணம் ஆகிய மூன்று மதங்களுக்கும் உரியனவாகும். | கி. பி. 1 ஆம் கி. பி. 2 ஆம் நூற்றாண்டு களில் இங்குள்ள பௌத்தம் குகைகள் பூர்த்தி யாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (.........) |
| 39) | குப்த சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் கிழக்கு இந்தியாவில் முக்கிய இரண்டு இராச்சியங்களாக மாலவ, கௌடவ என்பன விளங்கின. | மாளவ மன்னனான தேகுப்தன் கனோஜ் மீது படையெடுத்து கிரஹவர்மனைக் கொன்றான். (.........) |
| 40) | காந்தார கலைமரபு கிரேக்க, உரோம கலப்பு மரபாகும். இதன் முக்கிய அம்சமாகும். | மதுரா கலை மரபிலும் இத்தகைய பண்புகள் அனைத்தையும் காணலாம். (.........) |

## பகுதி - II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

01) தரப்பட்ட இந்தியப் புற உருவப் படத்தில் மேல்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிட்டு விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

(i) நர்மதை
(ii) ஹரப்பா
(iii) மதுரை
(iv) லோத்தல்
(v) தாமிரலிப்தி
(vi) குரு
(vii) பட்னா
(viii) கைபர்

*(18 புள்ளிகள்)*

02) சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

03) பிற்பட்ட வேதகாலத்தின் அரசியல், பொருளாதார நிலைகளை விளக்கி எழுதுக. *(14 புள்ளிகள்)*

04) அசோகனுடைய தர்மக் கொள்கையினை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

05) "தக்கணத்தில் சாதவாகனர் முதலாவது பேரரசை அமைத்தார்கள்"

(i) சாதவாகன வம்சத்து முதல் அரசனின் பெயர் யாது? *(1 புள்ளி)*

(ii) சாதவாகனர் அடக்கிய வட இந்திய இராச்சியங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக. *(2 புள்ளி)*

(iii) சாதவாகனர் கால கலை, கட்டடக்கலை என்பன பற்றி சுருக்கமாக விளக்கி எழுதுக. *(7 புள்ளி)*

(iv) மேலே உள்ள கூற்றை நியாயப்படுத்துக. *(4 புள்ளி)*

06) "குஷானர் காலம் இந்திய பண்பாட்டு வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய காலமாகும்"

(i) குஷானர்கள் தலைநகராக தெரிவு செய்த நகரம் எது? *(1 புள்ளி)*

(ii) குஷான வம்சத்தின் முதல் மன்னனாக கருதப்படுபவன் யார்? *(1 புள்ளி)*

(iii) குஷானர் காலத்தில் பௌத்த மதம் பெற்றிருந்த சிறப்பை சுருக்கமாக விளக்கி எழுதுக. *(4 புள்ளி)*


(iv) இந்திய பண்பாடு வளர்ச்சியில் குஷானர்களின் பங்களிப்பை விளக்கி எழுதுக. *(8 புள்ளி)*

07) சமுத்திரகுப்தன் காலத்தில் குப்த பேரரசு விரிவடைந்த விதத்தை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதுக.

(i) சந்திரகுப்த மௌரியன்
(ii) கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய இராச்சியங்கள்
(iii) குப்தர்கால இலக்கிய வளர்ச்சி
(iv) சுங்க வம்சம் *(7 × 2 = 14 புள்ளிகள்)*

09) பல்லவர் காலத்து பண்பாட்டு வளர்ச்சிகளை விபரக்குக. *(14 புள்ளிகள்)*


N